# திருத்தங்கல் நகராட்சி

## சாதாரண கூட்டம்

நிகழும் ஸ்ரீ விளம்பி வருடம் சித்திரை திங்கள் 17 நாள் **30–04–2018** ம் தேதி திங்கள் கிழமை காலை **11.00** மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.எஸ். முகம்மது சாகுல் ஹமீது, எம்.இ.,**

திருத்தங்கல் நகராட்சி **தனிஅலுவலர்**

நாள் . 26–04–2018 **திருத்தங்கல் நகராட்சி**

### பொருள் எண்.61

இந்நகராட்சி 2017-18-ம் ஆண்டு திட்டபணிகள் விவரத்தினை 27.03.2018-ம் தேதிய தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு உண்டான தொகை ரூ.20,028/- THE DAILY THANTHI -க்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:818/இ1/2018

### பொருள் எண்.62

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN67 L3265 , TN67 L3267 மினி லாரிக்கு முன்பக்க டயர்கள் 4 எண்ணம் சப்ளை செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1. யாசினி டயர்ஸ், சிவகாசி ரூ.8600/- No's
2. S.S.S டயர்ஸ், சிவகாசி ரூ.8800/-No's
3. குரு டயர்ஸ், சிவகாசி ரூ.8700/- No's

மேற்கண்ட விலைப்புள்ளியில் மிக குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. யாசினி டயர்ஸ், சிவகாசி என்ற நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 699/2018/H1)

## பொருள் எண்.63

திருத்தங்கல் நகராட்சி பொதுநிதித்திட்டம் 2018-19 கீழ்கண்ட பணிக்கு 31.05.2017 தீர்மான எண். 155 தனி அலுவலர் அவர்களால் ஒப்புதல் பெறப்பட்டதனை தொடர்ந்து மேற்படி பணிக்கு 18.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தபுள்ளி விபரம் (%குறைவு & % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி** பெரிய குளம் கண்மாயில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி | 20.00 | **M/S Almas Traders** | **0.18%** குறைவு |
| | | | **M/S Fancy Agency** | 0.13% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.18% குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **M/S Almas Traders** அவர்களின் ஒப்பந்தபுள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு–**

1. அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண் : 62/இ1/2017)

## பொருள் எண்.64

திருத்தங்கல் நகராட்சி பொது நிதி திட்டம் 2018-19 கீழ் கண்ட பணிக்கு 20.04.2018 அன்று ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தபுள்ளி விபரம் (%குறைவு & % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி** திருத்தங்கல் நகராட்சி அலுவலகத்திற்கு சோலார் பேட்டரிகள் சப்ளை செய்யும் பணி | 2.00 | **Best Power System** | **0.05%** கூடுதல் |
| | | | **Essaar Engineers** | 1.09% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% கூடுதலில் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **Best Power System** அவர்களின் ஒப்பந்தபுள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு–**

1. அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண் : 687/இ1/2018)

## பொருள் எண்.65

திருத்தங்கல் நகராட்சி பகுதியில் பல்வேறு இடங்களில் 1000 லிட்டர் மற்றும் 5000 லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்குகள் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்சமயம் சின்டெக்ஸ் டேங்குகள் அமைத்து பல ஆண்டுகள் ஆகி விட்ட படியாலும் கோடை வெயிலின் தாக்கத்தினாலும் 13 எண்ணம் சின்டெக்ஸ் டேங்குகள் வெடிப்புகள் ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே பொது மக்களின் குடிநீர் அவசியம் கருதி மேற்படி பழுதான சின்டெக்ஸ் டேங்குகளுக்கு பதிலாக புதிய சின்டெக்ஸ் டேங்குகள் 1000 லிட்டர் கொள்ளளவில் 13 எண்ணம் மற்றும் 5000 லிட்டர் கொள்ளளவில் 2 எண்ணம் வாங்கி குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000 (இரண்டு இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1122/இ1/2018)

## பொருள் எண்.66

திருத்தங்கல் நகராட்சியில் 2017-2018-ம் ஆண்டு பொதுநிதித் திட்டத்தின் கீழ் பெரியகுளம் கண்மாயில் உள்ள சிறுமின் விசைப் பம்புகளை இயக்குவதற்கு கூலி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் திரு.கே.கிருஷ்ணசாமி ஒப்பந்தகாரர் என்பவர் மேற்காண் பணிக்குரிய ஒப்பந்தப்புள்ளி பெற்று பணியினை மேற்கொண்டு வருகிறார். மேற்படி ஒப்பந்தமானது 31.03.2018-ம் தேதியுடன் முடிவடைவதனால் மேற்படி பணிக்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும், அவ்வாறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுவதனால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை தவிர்க்கும் விதமாக மேற்காண் பணிக்கு 2017-2018-ம் ஆண்டின் ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையிலேயே தொடர்ந்து 2018-2019-ம் ஆண்டிற்கும் பணி மேற்கொள்ள அனுமதிக்க வேண்டி ஒப்பந்தக்காரர் திரு. கே.கிருஷ்ணசாமி விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தின் பேரில் 2018-2019-ம் ஆண்டில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படக் கூடிய கூடுதல் செலவினங்களை தவிர்க்கும் விதமாக மேற்படி பணிக்கு 2017-2018-ன் ஆண்டின் பழைய ஒப்பந்தப்புள்ளி அடிப்படையிலேயே 01.04.2018-ம் தேதி முதல் 31.03.2019-ம் தேதி முடிய (2018-2019) ஒப்பந்ததாரர் திரு.கே.கிருஷ்ணசாமி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவினம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1648/இ1/2018)

## பொருள் எண்.67

திருத்தங்கல் நகராட்சியில் 2017-2018-ம் ஆண்டு பொதுநிதித் திட்டத்தின் கீழ் ஆணைக்குட்டம் மற்றும் தாளோடை பகுதிகளிலுள்ள சிறுமின் விசைப் பம்புகளை இயக்குவதற்கு கூலி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் திரு.கே.கிருஷ்ணசாமி ஒப்பந்தகாரர் என்பவர் மேற்காண் பணிக்குரிய ஒப்பந்தப்புள்ளி பெற்று பணியினை மேற்கொண்டு வருகிறார். மேற்படி ஒப்பந்தமானது 31.03.2018-ம் தேதியுடன் முடிவடைவதனால் மேற்படி பணிக்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும், அவ்வாறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுவதனால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை தவிர்க்கும் விதமாக மேற்காண் பணிக்கு 2017-2018-ம் ஆண்டின் ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையிலேயே தொடர்ந்து 2018-2019-ம் ஆண்டிற்கும் பணி மேற்கொள்ள அனுமதிக்க வேண்டி ஒப்பந்தக்காரர் திரு. கே.கிருஷ்ணசாமி விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தின் பேரில் 2018-2019-ம் ஆண்டில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படக் கூடிய கூடுதல் செலவினங்களை தவிர்க்கும் விதமாக மேற்படி பணிக்கு 2017-2018-ன் ஆண்டின் பழைய ஒப்பந்தப்புள்ளி அடிப்படையிலேயே 01.04.2018-ம் தேதி முதல் 31.03.2019-ம் தேதி முடிய (2018-2019) ஒப்பந்ததாரர் திரு.கே.கிருஷ்ணசாமி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவினம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1648/இ1/2018)

## பொருள் எண்.68

திருத்தங்கல் நகராட்சியில் 2017-2018-ம் ஆண்டு பொதுநிதித் திட்டத்தின் கீழ் இந்நகர் பகுதிகளிலுள்ள சிறுமின் விசைப் பம்புகளை இயக்குவதற்கு கூலி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் திரு.கே.கிருஷ்ணசாமி ஒப்பந்தகாரர் என்பவர் மேற்காண் பணிக்குரிய ஒப்பந்தப்புள்ளி பெற்று பணியினை மேற்கொண்டு வருகிறார். மேற்படி ஒப்பந்தமானது 31.03.2018-ம் தேதியுடன் முடிவடைவதனால் மேற்படி பணிக்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும், அவ்வாறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுவதனால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை தவிர்க்கும் விதமாக மேற்காண் பணிக்கு 2017-2018-ம் ஆண்டின் ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையிலேயே தொடர்ந்து 2018-2019-ம் ஆண்டிற்கும் பணி மேற்கொள்ள அனுமதிக்க வேண்டி ஒப்பந்தக்காரர் திரு. கே.கிருஷ்ணசாமி விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தின் பேரில் 2018-2019-ம் ஆண்டில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படக் கூடிய கூடுதல் செலவினங்களை தவிர்க்கும் விதமாக மேற்படி பணிக்கு 2017-2018-ன் ஆண்டின் பழைய ஒப்பந்தப்புள்ளி அடிப்படையிலேயே 01.04.2018-ம் தேதி முதல் 31.03.2019-ம் தேதி முடிய (2018-2019) ஒப்பந்ததாரர் திரு.கே.கிருஷ்ணசாமி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவினம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1648/இ1/2018)

தனிஅலுவலர்
திருத்தங்கல் நகராட்சி